தமிழ் உலகு

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபி௵ ஐப்பசி௴ 27௳ (12-11-'22.) | ப. 28.

விஷய அடக்கம்.

1. உலக நடை 287
(உதவி பத்திராதிபர்)
2. சாரதா ஸல்லாபம் ... 287
(சாரதா)
3. சட்டஸபை பஹிஷ்காரம் ... 288
(R. பஞ்சாபகேசன்)
4. ஆயர்பாடி ... 289
(ராம சந்திரர்)
5. செல்வத்தின் அருமையும், சிக்கனத்தின் பெருமையும் ... 291
(தண்டமிழ்த் தொண்டர் ஊ. சா. வேங்கடராமய்யர்)
6. அரபிகளின் அழகிய பயிற்சி ... 292
(தத்துவ இஸ்லாம்)
7. புயற் காற்று ... 293
(V. நாராயணையர், M.A., M.L.)
8. கதர்ப் பாட்டு ... 296
(பரலி. சு. நெல்லையப்ப பிள்ளை அவர்கள்)

தமிழ் உலகு
(THE TAMIL WORLD)

ஞாயிற்றுக்கிழமை தோறும் வெளிவரும்
தமிழ் வாரப் பத்திரிகை

பத்திராதிபர், S. பட்டாபிராமன் M. A.

சந்தா விவரம்:—

உள் நாடு.	வெளி நாடு.
½-வருஷம் ரூ. 3 0 0	½-வருஷம் ரூ. 3 8 0
1-வருஷம் ரூ. 5 0 0	1-வருஷம் ரூ. 6 0 0

எளிய நடையில் எழுதப்பட்டது; பாமரர்களுக்கும் பண்டிதர்களுக்கும் ஒருங்கே உதவுமாறு பலவிதமான பொருள்கள் அடங்கியது; பிரதிவாரம் லௌகிக விஷயங்களைப்பற்றிய குறிப்புகளும் வியாசங்களும் சரித்திர சம்பந்தமான விஷயங்களும் சாஸ்திர ஆராய்ச்சிக் குறிப்புகளும் சிறு கதைகளும் வேறு பலவிதமான பொருள்களும் அடங்கியது. மகாகவி ரவீந்திரநாத் டாகூர் தமது நூல்களைத் தமிழில் இப்பத்திரிகையில் வெளியிட அனுமதி கொடுத்திருக்கிறார். 'சித்திரா' வென்னும் அவருடைய நூலானது ஏற்கனவே இப்பத்திரிகை வாயிலாக வெளிவந்திருக்கிறது. அவருடைய மற்றொரு நூல் "புயற் காற்று" இப்பொழுது தொடர்ச்சியாக இப்பத்திரிகையில் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது.

ஆகவே, தமிழைப் பாராட்டவேண்டும், தமிழர் முற்போக்கு அடைதல் வேண்டும் என்பவர் யாவரும் வாங்கி வாசிக்கத்தக்கது.

'தமிழ் உலகு' காரியாலயம்
16, பசுபதி அக்கிரஹாரம்,
மைலாப்பூர், சென்னை.

சுதேசியமானது !

உபயோகமுள்ளது !!

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒற்றைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

உம்மிடி ராமய்யசெட்டி குருசாமிசெட்டி கம்பெனி

நகை வர்த்தகர்கள்
25, சைனுபஜார் ரோட், மதராஸ்

ఉమ్మిడి రామయ్య శెట్టి, గురుసామి శెట్టి
కంపెనీ
నగల వర్తకులు
25, చైనా బజారు రోడ్డు, మదరాసు.

பணம் திருப்பி கொடுக்கலாம்

ஒரு வருஷம் எங்கள் நிபந்தனையின்படி படிப்பவர்கள் இங்கிலீஷ் பாஷையில் குறைந்தபக்ஷம் 4-வது பாரம் வரையுள்ள படிப்பாவது அடையலாம்.

ஜோலிக்கு இடையூறில்லாமல் தங்கள் வீட்டிலிருந்தே கற்றுக்கொள்ளலாம்.

எப்பொழுதும் முன் பணமாக
வருஷசந்தா ரூ 10—8—0

புஸ்தகங்கள் ஒரே மொத்தமாக கொடுக்க மாட்டோம். எங்கள் ஸ்தாபனத்தில் ஒரு வருஷத்திய படிப்பை யடைந்தவர்களுக்கும், 4-வது பாரம்வரை படித்தவர்களுக்கும் 3வருஷம் கொண்டு பல விதத்திலும் இந்தியன் யூனிவர்ஸிடி B.A. பரீக்ஷைக்கு சமமான லண்டன் மெட்ரிக்குலேஷன் பரீக்ஷைக்கு சேருவதற்கு நாங்கள் மாணுக்கர்களை தயார் செய்கிறோம்.

ஏராளமான கம்மிஷனுக்கு வேலைசெய்ய ஏஜெண்டுகள் தேவை.

E. C. School,
Trivandrum.

இந்த பேப்பரின் பெயர் சொல்லிவரக் கூடிய ஆர்டர்களுக்கு சந்தா தொகையில் அணு எட்டு குறைவு செய்யப்படும்.

துப்பறியும் நாவல்கள்

ஆரணி குப்புசாமிமுதலியார் எழுதியது

		ரூ.	அ.
இந்திரா பாய்	...	2	8
அல்லது இந்திரஜாலக் கள்வன்			
சுந்தர சிங்	...	1	8
அல்லது பாஸ்கரவிலாஸ் படுகொலை			
அம்புஜாக்ஷி	...	2	0

வி. நாராயணன் கம்பெனி,
4, கொண்டிசெட்டி தெரு, மதராஸ்.

நவநீத கிருஷ்ண பாரதியார்
இயற்றிய

உலகியல் விளக்கம்

இந்நூலின் முதற்பாகமாகிய அறநெறியியல் அச்சாகிவிட்டது. விலை ரூபாய் இரண்டே. வேண்டுவோர் யாழ்ப்பாணம் பெரிய கடைத்தெரு, கிளவ் அச்சுக்கூடம், மானேஜருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

K. S. MUTHIAH & Co.,

Silk House, Benares City.

Branches **:—MADRAS & TINNEVELLY.**

எங்களிடம் சகல விதமான பட்டு பீதாம்பர புடவைகள், நாகரீகமான புதிய மாதிரி புடவைகள் (நவீன கலர்களில்) ரவிக்கை குட்டைகள், வெண்பட்டு தினுசுகள், நார்மடி தினுசுகள், ருத்திராக்ஷ மாலைகள், முதலிய சகல தினுசுகளும் ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம். உடனே எங்கள் கேட்லாக்கை தருவித்து பாருங்கள்.

கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி,
சில்க் ஹவுஸ், காசி.

பிராஞ்சு:—தபாற் பெட்டி 99, சென்னை.
போன் 1216 சென்னை.

உலக நடை

[உதவி பத்திராதிபர்]

சாத்வீக பொதுச்சட்ட மறுப்பு விஷயமாய் விசாரணை செய்துவந்த காங்கிரஸ் பிரத்யேக கமிட்டியார் வெகு நாட்கள் தாமதித்து இப்பொழுது தங்கள் தீர்மானங்களை வெளியிட்டிருக்கின்றனர். சாத்வீக பொது சட்ட மறுப்புக்கு இது ஏற்ற சமயமல்லவென்றும், ஒத்துழையாமையின் தர்மம் எங்கும் பரவி, அமைதியுடன் காரியங்கள் நிறைவேறும் வண்ணம் ஜனங்களை போதுமான அளவு பழக்கி, பிறகுதான் பொதுச்சட்ட மறுப்பு துவங்கலாமென ஏகோபித்து தீர்ப்பு செய்திருக்கிறார்கள். ஆயினும் காலத்தையறிந்து ஜனங்களுடைய மனப்பான்மையும் சாத்வீகப் போராட்டத்திற்கேற்ற ஸ்திதியிலிருக்கக்கண்டு, பின் யாதாயினும் ஓர் சட்டத்தை மறுக்கத்துவங்க மாகாண காங்கிரஸ் கமிட்டிகளுக்கு அனுமதி யளிக்கலாம் எனவும் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

இஃதல்லாது ஒத்துழையாதார் முனிஸிபாலிடி, லோகல் போர்ட் முதலியவைகளில் சேர்ந்து வேலை செய்வதில் அவரவரிஷ்டப்படியே காங்கிரஸ் நோக்கங்களுக்கு விரோதமில்லாமல் ஒத்துழைக்கலாமெனவும், கவர்ன்மெண்டு பள்ளிக்கூடங்களில் பையன்கள் சேருவதை கடுமையாய் தடுக்காமல், எங்கே தேசிய கலாசாலைகள் செவ்வனே அமைக்கப்பட்டுளதோ அங்கு பையன்களைச் சேரும்படி தூண்டவேண்டுமெனவும், வக்கீல்கள் தங்கள் தொழிலை செய்து வரலாமானாலும், கூடியவரையில் பஞ்சாயத்து நியாய ஸபைகள் ஏற்படுத்தி, வியவகாரங்கள் அங்கே விசாரணை நடைபெற்றுவர முயலவேண்டுவதெனவும் சிபார்சுகளின் அங்கங்கள்.

இக்கமிட்டியார் தங்கள் விசாரணைக்கென்று குறிக்கப்படாத விஷயமாகிய சட்டஸபை பஹிஷ்காரமொன்றில் தானாக தலையிட்டுக்கொண்டு, அங்கத்தினத்தினர்களின் அபிப்பிராயத்தில் வேறுபட்டு, ஜனங்களையும் கலக்கியிருக்கிறார்கள். ஆஜ்மல் கான், மோதிலால் நேரு, பதேல் ஆகிய இம்மூவரும் சட்ட ஸபையில் நுழைந்து, அங்கு காரியங்கள் நடைபெறுவதில் இடையூறு இயற்ற வேண்டுமெனவும், ஆன்ஸாரி, ராஜகோபாலாச்சாரியார், கஸ்தூரி ரங்கய்யங்கார் ஆகிய மூவரும் காங்கிரஸ் தீர்மானங்களில் இவ்விஷயமாய் யாதொரு மாறுதலும் கூடாதெனவும் இரு வேற்ற பிப்பிராயங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. இக்கமிட்டியின்முன் சாக்ஷியம் கொடுத்தவர்களில் அநேகமாய் யாவரும் சட்டஸபை பஹிஷ்காரமே நலமென் றுரைத்திருக்கிறார்கள்.

துருக்கிய சமாதானத்திற்கு இடையூறான சமாசாரங்களே அடிக்கடி எட்டிவருகின்றன. அங்கோரா ஜன சபையின் பிரதிநிதியாக ரபேட் பாதுஷா வென்பார் நேச தேசத்தார் தங்கள் வசத்தில் இப்போது வைத்துவரும் கான்ஸ்டாண்டிநோபிளையும் மற்ற பிரதேசங்களையும் காலி செய்து துருக்கியர்களிடம் இப்போதே ஒப்புவித்து விடவேண்டியதெனக் குறிப்பு விடுத்திருக்கிறார். இதற்கு நேசதேசத்தார் அமர்த்தியிருக்கும் அதிகாரி இணங்கமுடியாதென விடை அளித்திருக்கிறார். துருக்கி சுல்தான் துருக்கி தேசத் தரசுரிமையை இழக்க இணங்காததாயும், தற்காப்புக்கு நேசதேசத்தாரின் உதவியை இப்போது நாடியிருப்பதாயும் தெரியவருகிறது. இவ்விஷயத்தில் அங்கோரா ஜனப்பிரதிநிதிகளிடமே அபிப்பிராய பேதம் இருப்பதாயும், மற்ற அந்நியநாட்டு முஸ்லீம்கள் யாவரும் சுல்தானுடைய பாத்தியதையைப் பிடுங்குவதை ஆமோதிக்க மாட்டார்களெனவும் தெரிகிறது.

பெஸண்டம்மையார் இந்தியா தேச ஸேவையில் புதிதான வோர் வழியிலிறங்கி உழைத்து வருகிறாள். ஒரு புறம் ஒத்துழையாமையை இகழ்ந்து பேசுகிறாள். மற்றொரு புறம் பிரிடிஷ் மந்திரிகளின் போக்கையும் கண்டிக்கிறாள். இப்போது இந்திய ராஜாங்க அமைப்பை அமைக்க தலைவர்களெல்லாம் கூடித் தீர்மானித்து, அதன்பின் சட்டஸபையில் அவ்வமைப்பைச் சட்டமாக்கி, சுயராஜ்யம் பெற முயலவேண்டும் என ஊக்கங்கொண்டு வேலை செய்துவருகிறாள். ஜனங்களே தங்கள் ராஜ்ய அமைப்பை நிர்மாணிக்க பாத்தியதையுடையவர்களாம். ஜனப்பிரதிநிதிகளடங்கிய சட்டசபையில் தற்சமயமே முழு சுயராஜ்யத்திற்கு முறையிட்டு சட்டமியற்றினால், அச்சட்டத்தை தடுக்க எவராலும் கூடாதாம்.

ஆங்கிலேயர்கள் ஆதியில் அங்கோரா ஜனப்பிரதிநிதிகளின் நாயகத்தை ஒத்துக் கொள்ளாமலும், கான்ஸ்டாண்டிநோபிளில் இருந்த சுல்தானே அரசுரிமைக்கு பாத்தியமுள்ளவரெனவும் கூறிவந்தார்கள். இறுதியில், அங்கோராஸபையினர் தங்கள் வலிமையை அறிவுறுத்திய பின்னர், அவர்களுடைய பாத்தியதையை புறக்கணிக்கக்கூடவில்லை. இருந்தாலும் சமாதான விஷயமாய் பற்பல தேசப் பிரதிநிதிகளை வரவேற்கும்போது, சுல்தானுக்கும் தனியே கடிதம் விடுத்துளர். இதனால் ஆங்கிலேயர்களிடம் சந்தேகங்கொண்டு கான்ஸ்டாண்டிநோபிளில் தங்கள் உரிமை செலுத்தக் கருதி அங்கோரா அதிகாரிகள் நேசதேசத்தாரை காலி செய்யச் சொல்லுவதாய்த் தோன்றுகிறது. தவிரவும் சுல்தானைச் சுற்றியுள்ள பல மந்திரிகள் அங்கோராத் துருக்கியர்களுக்கு விரோதமாய் பல காரியங்கள் தூண்டியிருக்கிறார்கள். அதிகமாய் செலவழித்து வந்த சுல்தான் பட்ட கடன்களை அங்கோரா ஸபையார் ஒப்புக் கொள்வதாயென்ற விவாதமும் பிறந்திருக்கிறது.

சாரதா ஸல்லாபம்

(சாரதா)

இச்சென்னை மாகாணத்தில் மந்திரிகள் செலவைக் குறைக்கவேண்டிச் செய்யும் ஏற்பாடுகளை நோக்கின், அவர்கள் பூசினிக்காய் போகுமிடத்தை விட்டு, கடுகு போகும் வழியை நாடித் திரிபவர் போலக் காணப்படுகிறார்கள். சேவகர்களையும் மசாலச்சிகளையும் எடுத்து விடுவதினாலும் கடுதாசிப்பைகளை யொட்டாமலனுப்புவதினாலும் மாத்திரம் செலவு குறைந்து விடுமென நினைப்பதைக் கண்டால் ஆச்சரியமாயிருக்கிறது. கப்பலோடிப் பட்ட கடன் கொட்டை நூற்றடைக்க முடியுமா?

மேலதிகாரிகளைக் கணக்கின்றி யதிகப்படுத்தியும், அவர்களுடைய சம்பளங்களையும் அளவில்லாமலுயர்த்தியும், செலவைப் பெருக்கிவிட்டு இப்பொழுது அதுகளை மாற்றாமல் செலவைக்குறைக்கும் வகையுண்டோ? ஆங்கிலேய உத்தியோகஸ்தர்கள் சம்பளங்களை குறைப்பது முடியாதெனா அதிகாரிகள் சொல்லலாம். அது நிற்க, மற்றைய உத்தியோகஸ்தர்களுடைய சம்பளங்களைக் குறைத்து வேலை நடத்திக் காட்டினால் ஆங்கிலேய உத்தியோகஸ்தர்கள் சம்பளத்தைக் குறைக்கச் சொல்லிக் கேட்பதற்கு இடமுண்டு. இதை விட்டு அவர்களுக்கு சமானமாக நமக்கும் சம்பளமிருக்க வேண்டுமென நினைப்போர்கள் தேசாபிமானிகளெனக்கூடுமோ? தேசாபிமானத்தால் இராஜ்ய பரிபாலன காரியத்தை ஏற்றுக்கொண்டவர்களுக்கு சம்பளத்தினால் கௌரவம் உண்டாகுமோ? இதுகளை யெல்லாம் நியாயக் கக்ஷிக்காரர்கள் நன்றாய் கவனிக்கவேண்டும்.

இப் பரத கண்டத்தில் எக்காலத்திலும் உயர்வும் தாழ்வும் குணத்தாலும் செயலாலுமன்றி, பிறப்பினாலென்று சொல்ல முடியாது. நீசனாய்ப் பிறந்தும் ஈசனிடத்தில் அன்பு மிகுதியால், யாவரும் தன்னைத் தொழ நின்ற திருநாளைப் போவாரையும் மற்றுமுள்ள நாயன்மார்களையும் கோவில்களில் விக்ரஹ ரூபமாய் வைத்து பூசித்து வரும் இத்தேசத்தில், ஜாதி வித்தியாசத்தால் வரும் ஏற்றத்தாழ்வுகள் இருக்க நியாயமுண்டோ? பிறர் நன்மையையே கருதி, இகலோகத்து சுகங்களை வெறுத்து தவஞ்செய்து ஞானத்தை விருத்தி செய்து வந்த அந்தணர்களின் மரபில் வந்தவர்களாயினும் அக்குணங்கள் மாறி பொருளாசையால் அலைபுண்டு நடையல்லா நடையிலொழுகுபவரையும் அந்தணரென வணங்க நியாயமுண்டோ? இவர்களுக்கும் மற்றைய வருணத்தவர்களுக்கும் என்ன பேதம் இருக்கின்றது. அப்படிக்கிருக்க, தாங்கள் மற்றவர்களைப் பார்க்கிலும் மேலானவர்களென நினைப்பதும் தகுமோ. அவ்வாறு நினையாததினாலேயே மற்றையவர்களால் வருத்தப்படுகிறார்கள். மற்றைய ஜாதியார்கள் இப்பொழுது அடைந்திருக்கும் பொறாமையை நிவர்த்திக்கும் மார்க்கம் ஒன்றே. பிராமணர்கள் தங்களுக்குரியதாகிய க்ஷமை பலத்தைக்காட்டி நடந்துகொண்டால் கூடிய சீக்கிரத்தில் தாங்கள் அனுஷ்டித்த வழி சரியல்லவென்று மற்றவர்கள் தெரிந்து கொள்வார்கள்.

சகே[illegible]தரர்கள் [illegible]திரியைக் கண்டபொழுது தங்களுடைய கலகத்தை நிறுத்திவிட்டு ஒன்று சேர்ந்து போர் கொடுப்பதுபோல், இங்கிலாந்தில் யுத்தம் வந்த காலத்தில் கூடி நின்ற கக்ஷிக்காரர்கள். போர் நின்றவுடன், பிரிந்துவிட்டார்கள். அவர்களுக்குள் கலகம் அதிகரிப்பதாகவும் தெரியவருகிறது. எவ்வளவு கலகம் தம்முள்ளிருப்பினும் இந்தியா தேசத்தைப்பற்றி எல்லாரும் ஒரே மனதாயிருப்பது ஆச்சரியகரமாக இருக்கிறது. இத்தேசம் விரைவாய் விருத்தி யடையலாகாதென்பதே அவர்களது கோரிக்கை. ஏனெனில், இதன் விருத்தியினால் இங்கிலாந்திலுள்ள கைத்தொழில்களுக்குள்ள மேன்மை குறைவதல்லாது, அத்தேசத்திய வாலிபர்களுக்கு இத்தேசத்தில் உத்தியோகம் கிடைக்காதென நினைக்கிறார்கள். இது சரியல்ல. இவ்விரண்டு தேசங்களும் ஒத்து வாழ்வதினால் இரண்டிற்கும் நலமேயாம். தம்பி பொருள் சேகரிப்பதினால், தமயன் தனக்கு நஷ்டம் வருமென நினைப்பதும் தகுமோ? இத்தேசம் விருத்தி யடைவதெல்லாம் இதற்காதாரமாயிருக்கும் அத்தேசத்திற்கும் பலன் கொடாமலிருக்குமா? தீர்க்கதரிசிகளாயிருந்தால் இதை கவனித்து இந்து தேசத்தை விருத்தியாகும் மார்க்கத்தில் செல்லும்படி ஒத்தாசை செய்வார்கள்.

இந்தியாவிலிருக்கும் கேடுகளுக்குக் காரணங்கள் பலவாயினும் முக்கியமானது புத்திமான்கள் எல்லாரும் துரைத்தன உத்தியோகமே கௌரவமான தொழிலென நினைப்பதாகும். மேலான ஸ்திதிக்கு வந்திருக்கும் மேல் நாடுகள் எல்லாவற்றிலும் இவ்வெண்ணம் கிடையாது. நம் நாட்டிலும் அவ்வாறே முற்காலத்திலிருந்ததென்பது தொழுதுண்டு வாழ்தலை இகழ்ந்து கூறியிருக்கும் நூல்களால் தெரியவருகிறது. முக்கியமாக அந்தணர்கள் அருளும் ஞானமுமே தமக்கு தனமெனக் கைகொண்டு அரசரது விருப்பு வெறுப்புகளுக் கஞ்சாது உலகிற்கு ஹிதத்தையே நாடி நடந்து வந்தார்கள். அப்பொழுது அவர்களும் பூவுலகில் தெய்வமெனத் தொழப்பட்டார்களென்றால் தகாதோ? இவ்வழிகளிலிருந்து முற்றும் விலகி தமதின்பத்தையே நாடி பிறரைத் தொழுது வாழும் இவர்களையும் மற்றவர்கள் மதிக்கும் வகையுண்டோ? அந்தணர்களுக்கிப்பொழுது நேர்ந்திருக்கும் கேடெல்லாம் அவர்கள் செயலாலேயன்றி வேறல்ல. இனி யிதிலிருந்து கரையேறுவது அவரது செயலாலேயே யாகவேண்டும்.

சட்டஸபை பஹிஷ்காரம்.

[R. பஞ்சாபகேசன்]

மேற்கூறிய சட்டஸபை பஹிஷ்காரம் யாது காரணத்தால் துவங்கியது என்றதை சற்று ஆலோசித்தால் இப்போது சட்டஸபையில் புகுவது உசிதமோவென்பது புலனாகும். ஆங்கிலேயர்கள் இத்தேசத்தில் ஆட்சி தொடங்கிய காலம் முதல் இதுவரை, தாங்கள் சுயநலம் பாராட்டி தங்கள் ராஜ்யத்தைப் பெரிதாக்க வந்தாரில்லை யென்றும், இந்தியர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டு தங்களுடைய முன்னேற்றத்தைக் கருதாது வருந்துகிறார்களே யெனப் பரிதாபங்கொண்டு, சண்டையிடுவோரை யடக்கி, பொது ஜனங்களுக்குத் தங்கள் தங்கள் தொழில்களை அமைதியுடன் நடத்திவர சௌகரியங்களைச் செய்வதே தமது நோக்கமெனவும், தேச க்ஷேமத்திற்குரிய சாதனங்களைச் செய்து, கல்வி கற்பித்து, ஜனங்களை தேச ஆட்சியில் பழக்கி, கடைசியாக அவர்களிடமே யாவற்றையும் ஒப்புவிக்கும் எண்ணங்கொண்ட அன்புடையோர்களே தாங்கள் எனவும் பன்முறை சொல்லி வந்திருக்கிறார்கள். இவ்வெண்ணங்களுடன் ஆங்கிலேயர்கள் இரண்டு மூன்று நூற்றாண்டுகளாக உழைத்து வருகிறார்கள். அன்பையே அடிப்படை யெனக்கொண்ட இவ்வுழைப்பின் பயனைப்பெற்ற இந்தியாதேசம் இப்பொழுது எந்நிலையிலிருக்கின்றது. நாம் திருப்தியுடன் இருந்துவந்த பழமையான நாகரிகம் போய் எங்கும் அதிருப்தியே குடிகொண்ட புதிய நாகரிகம் உலவி வருகின்றது. ஜனங்களின் வயிற்றை நிரப்பி தே

கத்தை போஷிக்கக்கூடிய சாதனங்கள்போய் வெளிப்பகட்டுடன் பூஷிக்கிறதென்ற நவீன நாகரிகச் சாதனங்கள் புலப்படுகின்றன. வலிமை போய் அடிமையாக மாறியிருக்கின்றோம். புத்தியை விசாலப்படுத்தும் கல்வி கரையேறிவிட்டது. அதிகாரிகளின் அன்பு வாய்ப்பேச்சோடு மட்டும் நின்று, காரியங்களில் அதிகாரமும் பலமுமே நிலைத்திருக்கின்றன. அன்புடன் அளிப்பதாகச்சொல்லும் கருவிகளெல்லாம் துன்பத்தையே விளைவிக்கின்றன. இந்நிலைமையை நோக்கி அதனை சீர்திருத்த வழியாதெனப் பல காலமாக ஜனங்கள் அறிய முயன்று வந்திருக்கிறார்கள். ஜனங்களின் மனதையறிந்து பல அறிவாளிகளான தலைவர்கள் முற்பட்டு அதிகாரிகளுடைய தேக பலத்திற்கு ஆளாயிருக்கிறார்கள். நாமோ பெரும்பாலும் தானிய வகைகளையே யுண்டு, மாமிச பக்ஷணத்தை விலக்கி, அஹிம்ஸா தர்மத்தில் பெயரெடுத்த மதங்களையே போற்றுபவர்கள். இம்மதத்தையே கைவிடாது நம் நாட்டின் கேட்டை சீர்தூக்க ஊக்கங்கொண்டிருக்கிறோம். நாம் தேகவலிமையை விட்டு மனவலிமையிலேயே பலங்கொண்டவர்கள். நம் நன்மைக்காக வென்று அதிகாரிகளிடும் சாதனங்களை நம் மனவலிமையைக் குறைக்கவெண்ணி யிட்ட மாய வலைகளெனக் கற்றுக்கொண்டு விட்டோம். அம்மாயாவலைகளில் சிக்கிக்கொள்ளாமல் அவைகளை விலக்குவதே ஒத்துழையாதார்களாகிய நாம் பூண்ட கொள்கை. இக்கொள்கையையே மனவுறுதியுடன் கைக்கொண்டு ஜனங்களை ஒழுங்குடன் நடத்தவல்லோரையே நாம் தலைவரென ஆதரிக்கின்றோம். அதல்லாது இக்கொள்கைக்கு மாறாக ஒழுகும் எவரையும் ஜனங்கள் ஆதரிக்கமாட்டார்கள். மகாத்மா காந்தியை ஜனங்கள் தெய்வம் போல் கொண்டாடும் காரணமும் இதேயாகும். அவர் வார்த்தைகளிலும், மனதிலும், காரியங்களிலும் ஜனங்கள் தங்களுடைய நீண்டகால அனுபவத்தால் கற்றுக்கொண்ட உறுதியான உண்மைக் கொள்கையைப் பின்பற்றியதால், அவர் ஜனங்களின் மனதில் தெய்வமாக விளங்குகிறார். ஆகையால் ஜனங்களுடைய ஆதரவை எதிர்பார்க்கும் தலைவர்கள் அவர்கள் முன் தாங்கள் எக்காலத்தும் மாறாத நற்குணங்களமைந்த சுத்தர்களென விளங்க வேண்டும். ஜனங்கள் யாவரும் ஒத்துழையாமைக் கொள்கையைப் பின்பற்றி நடக்கிறார்களாவெனக் கேள்வி பிறக்கலாம். பலர் இக்கொள்கையை பல அசௌகரியங்களால் வெளிப்படையாகக் காரியங்களில் விளக்காது போனாலும், அவர்கள் மனதில் இக்கொள்கை நிலைபெற்றிருக்கிறது. இதை யாவரும் எளிதில் அறியக்கூடும். அதிகாரிகளின் அதிகாரம் வலுக்க வலுக்க, இக்கொள்கையின் உறுதி வலுத்து காரியங்களிலும் வெளிப்படும். நன்றாக காரியங்களில் வெளிப்பட்ட பின்னரே, சாத்விக சட்ட மறுத்தல் துவங்க வேண்டும். இக்கொள்கையின் பலத்தைத் தடுக்கவே, அதிகாரிகள் மனவுறுதியற்று தன்னலத்தைப் பெரிதாகப் பாராட்டுகிற சிலரை தங்கள் வலையில் பிடித்து போலி அதிகாரங்களையும் கௌரவங்களையும் அளிக்கின்றனர். இக்கௌரவம் பெற்றவர்கள் ஒத்துழையாதார் பேரில் பல குற்றங்களைச் சுமற்றுகின்றனர். ‘நேற்று மழை அதிகமாய்ப் பொழிந்து ஆற்றில் வெள்ளமதிகரித்து சேதங்கள் உண்டானதும் ஒத்துழையாதார்களால்’ என்பதைப்போன்ற பலவித குற்றங்களைப் புகட்டுகின்றனர். அவர்கள் இவ்விதம் வெளியிடுவதை ஒத்துழையாதார் ஒருபொருட்டாக மதிக்க வேண்டுவதில்லை. கொள்கையின் உண்மை நன்றாய் விளங்குகிறது. சட்ட ஸபையில் புகுந்து காரியங்களை அங்கு நடை பெறாதவாறு செய்து, பின்பு அதிகாரிகளின் அதிகாரமே நிலைப்பதையும், சீர்திருத்தங்கள் மாயைகளென்றும் வெளியிடவேண்டியது ஒத்துழையாதார்க்கு அவசியமில்லை. குற்றங் கூறுவோர் கூறிக்கொண்டேயிருப்பார்கள். அவற்றை செவி கொடுத்துக் கேட்காது தங்கள் கடமையை செய்வதில் மனதை நாட்டி தலைவர்கள் உழைப்பார்களாக. நாமோ அரசாங்கம் வேண்டாமென்றாவது அல்லது அதிகாரிகளுடன் ஆயுதந்தாங்கி போர் தொடுப்பதென்றாவது எண்ணவில்லை. நமக்குக் கொடுபட்டிருக்கும் சீர்திருத்தங்கள் உண்மையான சீர்திருத்தங்களல்லவென்றும், அவைகளை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை யெனவும், ஜனநாயக ஆட்சி இவற்றால் உண்டாகாதெனவும் கூறுகிறோம். இவற்றில் யாது நம்மேல் குறை கூறுவதற்கிருக்கின்றது. தங்களிடம் எனக்கு வேலையும் வேண்டுவதில்லை, எனக்குக் கூலியும் தாங்கள் கொடுக்கவேண்டுவதில்லை யென ஓர் வேலையாளர் யஜமானனிடத்தில் சொல்லுவது தகாதோ? இதற்காக யஜமானன் கோபங்கொண்டால், வேலையாளன் அதனைப் பொருட்படுத்தி அஞ்சுவனோ?

ஆயர்பாடி.

[ராம சந்திரர்]

நான் ஒரு நாள் காலையில் ஆயர்பாடியின் வழியே செல்லுகையில் அவ்வூரிலுள்ள குளக்கரையிலிருக்கும் அரசமரத்தடியில் பல மாந்தர்கள் கூட்டமாய் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களுக்கெதிரில் மரத்தடி மேடையின்மீது நறைத்த மயிரும் திரைத்த மேனியும் உடைய அவ்வாயர் தலைவனாகிய கிழவன் கையிலிருந்த தடியை கீழே ஊன்றிக் கொண்டு நடுங்கிய குரலோடு பேசிக் கொண்டிருந்தான். நானும் அருகில் சென்று கூட்டத்தில் கலந்து நின்றேன்.

தலைவன். மைந்தர்காள்! நமது மேன்மையும் நன்மையும் ஆவினங்களாலென்பது எல்லாருக்கும் தெரிந்திருக்கலாம். அவைகளை நாம் எவ்வளவு அன்புடன் வளர்க்கிறோமோ அவ்வளவு மேன்மையை நாம் அடைகிறோம்; எனது இளமையில் ஆவினங்கள் எம்மைக் கண்டவுடன் நெருங்கிவந்து கையிலிருக்கும் உணவுகளை வாங்கித்தின்பதல்லாது, எம்மை நக்கி முகத்தால் தேய்த்து அன்பைக் காட்டும். தற்காலத்தில் இவையெல்லாம் முற்றிலும் மாறிவிட்டன. நம்மைக் கண்டவுடன் மாடுகள் வெறித்து பயந்து ஓடுவதல்லாது, சில நம்மை அணுகிவரும் மாடுகளைக்கூட முட்டித் துரத்துகின்றன. இதன்றியும் முன்போல் நாமிடும் தீவனங்களை தின்பதில்லை. அதனால் பால் குறைந்து விட்டது. கன்றுகளுக்குக்கூட சரியாக ஊட்டங்கொடுப்பதில்லை. இம்மாறுதல்களினால் நமக்கு உண்டாகும் கேடுகள் அனேகம். ஆதலால் இவைகளை நிவர்த்திக்கும் மார்க்கத்தைத் தேடாவிட்டால் நமது மேன்மைக்குக் குறைவு வந்துவிடும். இதன் காரணங்களை விசாரித்துக் தக்க சிகிச்சைகளைச் செய்வதவசியம். உங்களுக்கென்ன தோன்றுகிறது என்று கூட்டத்தாரைக் கேட்டவுடன், அங்கிருந்து வெளி வந்த மந்தியா பிள்ளை என்பவன் தலைவரருகில் நின்று பேசத்தொடங்கினான்.

மந்தியாபிள்ளை: *அன்புள்ள அண்ணன்மாரே! இப்பொழுது தலைவர் சொல்லிய வாசகங்களைக் கேட்ட உங்களுக்கு இவ்வாவினங்களை நமது அன்பினாலேயே வசப்படுத்துவது அவசியமெனச் சொல்லவேண்டுவதில்லை. தற்சமயத்தில் அவைகளுக்கு உண்டாயிருக்கும் குண வேறுபாட்டிற்குக் காரணத்தைக் கவனிக்குங்கால் அவைகளுக்குக் காவலாய் நம்மால் முன்னர் நியமிக்கப்பட்டிருந்த காவாலி யுடையாரினது குரூரச் செயலாலே என்பது நன்கு விளங்கும். கட்டுக்கடங்காத சில ஆவினங்களை உடையார் அடித்து வதைத்ததைக் கண்டு மற்றவைகள் நம்மைக்கண்டு மருண்டு திரிகின்றன. அது முதல் அவைகள் ஏக்கங்கொண்டு இரை எடுக்காமலிருக்கின்றன. வெளியில் மேய்ந்துவரும் காலம் தவிர மற்றையகாலங்களிலெல்லாம் உணவை அருந்தாது மயங்கிக் கிடக்கின்றன. இவைகளுக்கு மறுபடியும் நம்மிடத்தில் நம்பிக்கை வரும்படிச் செய்வதல்லாது, அவைகளிடத்தில் அன்புடன் கட்டிலேயே கிடக்கும் பசுக்களை எல்லாம் காலாறும்படி விட்டுத் தக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அப்பொழுது அவைகளுக்கு முன்போல் நம்மிடத்தில் அன்பு உண்டாகும். இதற்காகவே நான் ஒரு பெரிய மேனி நிலத்தில் அதிக பணம் செலவழித்து வேலி யடைத்து அதற்குள் ஆவிந்நிரைகளைவிட்டு ஏதேச்சையாய் உலவும்படிச் செய்திருக்கிறேன்; சில பசுக்கூட்டங்கள் அவ்வேலிக்குள் சென்று அங்கிருக்கும் காய்ந்த புல்லை மேய்ந்து குளத்திலுள்ள நீரைக் குடித்துக் களித்துத் திரிகின்றன. ஆனால் பெரும்பான்மையாயுள்ள பசுக்கள் வேலிக்குள் சென்றால் என்ன அபாயம் நேரிடுமோவென பயந்து அவ்வாறு செல்லாதிருக்கின்றன. அதல்லாமலும் உள்ளே செல்லும் பசுக்களைக் கூடச் செல்லாமற் றடுக்க எத்தனிக்கின்றன. இவ்விதமாய் சந்தேகங் கொண்ட ஆவினங்களைத் தேற்றும் பொருட்டு இவ்வேலிகளின் உயரத்தைக் கொஞ்சம் கொஞ்சமாய் குறைத்துவிடலாமென்று நினைக்கிறேன். இவ்வாறு செய்வதினால் வெளியில் பயந்து நிற்கும் மாடுகளைக்கூட பட்டிக்குள் வரும்படிசெய்து அங்கிருக்கும் சௌகரியங்களைக்காட்டி தீவனங்களை மெதுவாய் அவைகளுக்கு சேர்ப்பித்து பால் பெருகும் வண்ணம் செய்யலாமென்று நம்புகிறேன். நீங்களும் அவ்வாறே தீர்மானிக்கும்படி வேண்டுகிறேன்.*

என்று சொல்லி நிறுத்தியவுடன் அக்கூட்டத்திலிருந்து விரைவாய் வந்த கரிசாண்டிப் பிள்ளையென்பவன் தலைவரருகில் நின்று வெகு கோபத்துடன் மொழிவதானான்.

கரிசாண்டிப்பிள்ளை: *அறிவிற் சிறந்த தீரர்காள்! இப்பொழுது மந்தியாபிள்ளை கூறிய மொழிகள் என் மனதை வருத்துகின்றன. அவரும் நமது ஆயர்குலத்தில் பிறந்தவரோ அல்லவோ என்று சந்தேகமுண்டாகிறது. ஆயர்குலத்தில் உற்பத்தியானவர்களில் ஆவிற்குப் பயந்து நடப்பவர் இவரைத்தான் கண்டேன். துஷ்டச்செயல் காட்டும் பசுக்களைக் கஷ்டப்படுத்தி யடக்குவதல்லாது அவைகளுக்கும் அன்பு காட்டலாமோ? இப்பெரும் பசுக்கூட்டங்களை யெல்லாம் நாம் வைத்துக் காப்பாற்றுவது நமது வலியினாலன்றி வேறுண்டோ? அவைகளிடத்தில் நமது வலி குறைந்ததாகக் காட்டி இடங்கொடுத்த மந்தியாபிள்ளை செயலாலேயே அவைகள் இந்நிலைக்கு வந்து விட்டதென்பதில் ஐயமில்லை. கூடுமானால் இப்பொழுதாவது மந்தியாபிள்ளை கட்டியிருக்கும் வேலியைப் பிடுங்கியெறிந்துவிட்டு மாடுகளையெல்லாம் முன்போலவே கொட்டில்களில் கட்டி வைப்பதே நலமென நினைக்கின்றேன். ஒரு வேளை அவ்வாறு செய்வதற்கு ஏதாவது இடைஞ்சலிருந்தால் பட்டிக்கு வெளியிலிருக்கும் பசுக்களில் துஷ்ட சுபாவமுள்ளவற்றையெல்லாம் பிடித்துக் கட்டி வைத்து அடித்து மற்றைய பசுக்களுக்கு பயம் வரும்படி செய்தால், இவைகளெல்லாம் மறுபடியும் முன்போலடங்கி நடக்கும். இதன்றி இப்பொழுது இடப்பட்டிருக்கும் வேலியைக் கூடத் தழைத்து விடுகிறதென்று சொல்லிய மந்தியாபிள்ளையினது ஆலோசனை புத்தியுள்ளவர்கள் அங்கீகரிக்கத் தக்கதன்று. இதற்காக நாம் இதுவரையில் நியமித்த காவலாளர்களைப் பார்க்கிலும் அதிகமாக நியமித்து ஆவிந்நிரைகளை யெல்லாம் தனித்தனியாய்ப் பிரித்துவிட்டு பந்தோபஸ்து செய்யவேண்டும். இவ்வாறு செய்யாவிட்டால் நமது தனத்திற்கே நாசமுண்டாகும். எல்லாரும் நன்றாயாலோசித்துத் தீர்மானிப்பீர்களென நம்புகிறேன்.*

இவ்வாறு கோபாவேசத்தோடு கரிசாண்டிபிள்ளை கூறி நின்றவுடன், தலைவர் எழுந்து நின்று மறுபடியும் கூறுவதானார்.

தலைவர். *மந்தியாபிள்ளையும் கரிசாண்டி பிள்ளையும் கூறிய மாற்றங்களைக்கேட்டு என் உள்ளம் ஊசலாடுகின்றது. ஆவினங்களை நம் வசப்படுத்துவ தவசியமே. ஆனால் அதற்கு அன்பையோ ஆற்றலையோ துணையாகக் கொள்வதென சந்தேகமுண்டாகிறது. இதற்கு முன் என் ஞாபகத்திற்குள்ளேயே பல தடவைகளில் ஆவினங்கள் மனம் வேறுபட்டதுண்டு. அப்பொழுது நமது ஆற்றலினாலேயே யடக்கி விட்டோம். அக்காலத்திலெல்லாம் அவைகளின் செயல் வேறு மாதிரியாக இருந்தது. நம்மை எதிர்த்து முட்டி உபத்திரவம் செய்யத் தலைப்பட்ட அவற்றிற்குத் தக்க சிக்ஷை செய்வது வழக்கம். இப்பொழுதோ அம்மாதிரியான உபத்திரவங்கள் செய்யாமல் தாங்கள் தீனி தின்பதை நிறுத்தி நமக்கு நஷ்டத்தை விளைவிக்கின்றன. தீனியைப் பக்கத்தில் வைத்துத் தின்னும்படி மாடுகளை யடித்தால் தின்னாமலிருந்துவிட்டால் அடிதான் பலனாகும். மாடுகள் நாசப்படுமேயல்லாது நமக்குப் பால் கிடைக்குமோ? ஆலோசியுங்கள்! வீணாய் அயல் கிராமங்களிலிருப்பவர்கள், நம்மை, பசுக்களை வருத்துகிறார்களென இகழ்வதல்லாது வேறு பயனுண்டாகுமா? அதிகமாய் நம்முடைய பிகுவைத் தளர்த்தாமலே மாடுகளிடத்தில் அன்பு காட்டி வசப்படுத்தவேண்டும். பட்டிக்குள் வந்திருக்கும் பசுக்களுக்கு நாம் செய்யும் உபசாரத்தைப் பார்த்து வெளியிலிருக்கும் பசுக்களுக்கும் உள்ளே செல்லவேண்டுமென்கிற ஆவலுண்டாகவேண்டும். இவ்வாறு மெதுவாய் எல்லா நிரைகளையும் பட்டிக்குள் கொண்டு வந்து சேர்த்து விட்டால் பிறகு வேலியை பலப்படுத்தி சுவராக வேண்டுமானாலும் எடுத்து விடலாம், அவைகளும் அதற்குள் உலாவி சுகித்திருப்பதுடன் நமக்கு வேண்டிய பாலையும் கொடுக்கும். இவ்வாறு செய்வதே நல்ல உபாயமென எனக்குத் தோன்றுகிறது. உங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவேண்டுமெனக்கேட்டவுடன் அங்கிருந்த கூட்டத்தாரெல்லாரும் அவ்வாறு செய்வதே சரியெனத் தீர்மானித்தார்கள். கூட்டம் கலைந்தது. நானும் தலைவனது தந்திரச் செயலைக் கண்டு வியந்து வீடடைந்தேன்.*

செல்வத்தின் அருமையும், சிக்கனத்தின் பெருமையும்.

[தண்டமிழ்த் தொண்டர், ஊ. சா. வேங்கடராமய்யர்]

உலகத் துதித்த மக்களுக்கு இவ்வுலக வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டுவன கல்வி, செல்வம் என்ற இரு பெரும் பொருள்களாம். அவற்றுள்ளும், மிக மேம்பட்டது கல்விச்செல்வம் என்பது எல்லாருக்கும் ஒப்ப முடிந்த தொன்றே. என்றாலும், இக்காலம் உலகம் நடைபெற்றுவரும் முறைமை பெரும்பாலும் அதற்கு மறுதலைப்பட்டிருக்கின்றது. உதாரணமாக, கற்றுவல்ல பலரும் பொருட் செல்வத்தைப் பெற்றிராமையால் வறிதே துன்புற்று உழன்றுவருதலையும், கல்லாத பலரும் எப்படியோ பொருட் செல்வத்தைப் பெற்றுள்ளமையால் கவலையற்று இன்புற்று வாழ்ந்து வருதலையும் குறிப்பிடலாம்.

ஒருசிலர், அடியேன் கூறியதற்கு எதிராக உள்ள சிலரைக் காட்டி மறுக்கப் பார்க்கலாம். எனினும், அது, நாட்டின் முன்னேற்றத்திற்கும், கடவுளின் பொதுத்தன்மைக்கும் முரண்பட்டதாகும் எனக் கூறி மீட்டும் மறுக்கத் தக்கதேயாகும். இதனால், அடியேன் கல்விச் செல்வத்தை வேண்டாதது என வெறுத்தவனாகவோ, அல்லது அதனைப்பெற முயலவேண்டாம் என நேயர்களை வற்புறுத்தியவனாகவோ ஆகமாட்டேன்.

ஆனால், நம்மவர் வெறும் புத்தகப் படிப்பை மாத்திரம் படித்து, செல்வ நிலையாமை, இளமைநிலையாமை, யாக்கை நிலையாமை ஆகிய நிலையாமைகளை மாத்திரம் கற்று, அவற்றையே பிறர்க்கும் போதித்து, அம்மாத்திரையில் தங்களது கடமை நிறைவேறியதாகக் கருதி, பொருளீட்டும் வழிகளைக் கற்பியாதும், பழித்தும்—ஆனால், பொருளாசை குறையாமலும்—வீணே நாள் கழிக்காமலிருக்கவும், பொருட் செல்வத்தின் பெருமையை உணர்ந்து நல்வழியிற் சம்பாதித்துச் சிக்கனத்தோடு இன்புற்று வாழ்ந்து வரவும் தூண்டியவனாவேன்.

இனி, பொருட்செல்வமோ ஒருவனுக்கு இம்மையிலே இனிது உண்டு உடுத்து வாழ்வதற்கு உதவி புரிகின்றது. எவனிடம் பொருளிருக்கின்றதோ அவனையே, அவன் கல்லாதவனாயிருப்பினும் உலகினர் நன்கு மதிக்கின்றனர். அவனே எந்த இடத்திலும் முன்னர் அமர்த்தப்படுகிறான். அவனிடத்துள்ள தீக் குணங்களும், செயல்களும் மறைக்கப்படுகின்றன. இல்லாத, தகாத பல உயர்ந்த குணங்களும் செயல்களும் அவனை வலிவிலே வந்தடைகின்றன. வேறு பல அதிகாரங்களும் வருகின்றன. அறியாமலும் பல புண்ணியங்கள் கிடைக்கின்றன. இத்தகைய இன்னும் பல அதிகம் சொல்லுவானேன். அவன் எழுதப் படிக்கத் தெரியாத கைக்குறியாளனாயிருப்பினும், அவனுக்குத் தனது தேசத்தை ஆட்சி புரியும் சபைக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமையும் வருகின்றது.

அன்றியும், அவனால் நிறைவேற்ற முடியாத தொழிலும், அனுபவிக்க முடியாத இன்பமும் இங்கு இல்லை என்றே கூறலாம். 'பணம் பத்தும் விதமும் செய்யும்' என்பது நமது நாட்டுப்பழமொழி.

நிற்க, இதற்கு எதிராக ஒருவன் நன்கு கற்றுவல்லவனாயினும் அவனிடம் பொருட் செல்வம் இல்லாதிருந்தால், அவன் பெற்ற தாயாலும், 'வாழ்விலும் தாழ்விலும் இன்பிலும் துன்பிலும் ஒருமனப்பட்டு ஒத்துழைப்பேன்' என உறுதி கூறுவித்துக்கொண்டமனைவியாலும் தன்னுடைய செல்வங்களாகிய மக்களாலும், தான் பொருளாளனாயிருந்த காலத்து 'சோற்றுருண்டை உடைந்த பொழுது சுற்றி நிற்கும் காகம்' போலத் தொண்டு பூண்டு சூழ்ந்து நின்ற உறவினர்களாலும், பிற உலகினராலும் பெரிதும் வெறுக்கப்படுகிறான் என்பது உலக மறிந்தது. இவ்வளவேயோ; அவன் தன்னைத் தானேயும் வெறுத்துக்கொள்ளும் நிலைமையிற் கால்நடைப் பிணம்போல் இவ்வுலகிடைத் திரிந்து உழல்கிறான்.

பொருள் உயர உயர இவ்வுலகில் அதிகாரம், இன்பம் முதலிய வளர்ந்து வருவதும், குறையக் குறைய அவை குறைந்து வருவதும் கண் கூடு. இங்கே, பொருட் செல்வத்தின் உயர்வினை விரிவாக அறிந்து கொள்ளவிரும்புவோர், 'பொருட்படுத்தத் தகாதவரையும் பொருட்படுத்தும் வண்ணம் உலகினரைச் செய்யவல்லது பொருள்' என்றும், 'பகைவரது செருக்கை வேரோடழித்துத் தன்னை உயர்த்திக் கொள்ள விரும்புவோன் பொருளாகிய எஃகாயுதத்தைச் செய்து கொள்ளல் வேண்டும்' என்றும், 'எங்ஙனம் அருளைப் பெற்றிராதவர்க்கு மறுமையில் இன்பம் இல்லையோ, அங்ஙனமேதான் பொருட் செல்வத்தைப் பெற்றிராதவருக்கும் இம்மையில் இன்பம் இல்லை' என்றும் வரும் திருக்குறட்பாக்களையும், பிறபொருள் நூல்களையும் ஊன்றி யறியற்பாலர்.

இங்ஙனமே பொருளின் உயர்வைக் கூறிக்கொண்டே போகலாம். எனினும், அடியேன் அங்ஙனம் கூற முன்வரவில்லை. இவ்வளவுங் கூறியதனால் உலகில் மக்களாவார்க்கு இன்றியமையாது வேண்டப்படுவன கல்வி, செல்வம் என்ற இரு பெரும் பொருள்கள் என்பதும், அவற்றுள்ளும் இக்காலம் நமது நாட்டினரால் பெரிதும் விரும்பித் தேடப்படவேண்டியது, நம்மவரால் பலநாட்களாகப் பொருட்படுத்தாது கைவிடப்பட்ட பொருட்செல்வமே யென்பதும், அதனைப்பெறாதவர் துன்புறுவர் என்பதும், ஆதலின், நம்மவர் ஒவ்வொருவரும் பொருட் செல்வத்தைப் பெரிதும் விரும்பித் தேடிப் பேரும் புகழும் பெற்று இன்புறல் வேண்டும் என்பதும் ஒருவகையிற் குறிக்கப்பட்டனவாம். இதுவரையிற் 'செல்வத்தின் அருமையும்' என்ற பகுதிக் குரித்தாம்.

இனி, எடுத்துக் கொண்டதற் கேற்பச் சிக்கனத்தைப்பற்றிக் கூறுதல் பொருத்தமானது. சிக்கனம் என்பது வரவுக்குந் தக்க செலவு செய்து வாழ்ந்துவரும் ஒருவனது வாழ்க்கைக்குச் செல்வ நிலைக்கேற்பத் துணைபுரியும் ஒருவகைத் தன்மை' என விரித்துரைக்கப்படலாம். சிக்கனமுடையோர் உலோபத் தன்மையினர் ஆகார். சிக்கனம் வேறு; உலோபத் தன்மைவேறு. உலோபம் தானும் அனுபவியாது, பிறரையும் அனுபவிக்கவிடாது நிற்கும் தன்மையாம். இஃது அங்ஙனமன்று. ஆனால்,இது, 'தனது வரும்படி எவ்வளவு? தான் செய்யவேண்டிய காரியங்கள் எவை? எப்படிப் பகுத்துக் கொண்டால் தான் செய்யவேண்டிய அனைத்தையும் உலகினர் புகழ, பிறர்க்கு ஆட்படாது இனிது செய்து முடிக்கலாம்?' என்பதை முற்கூட்டி ஆராய்ந்து தக்கதொரு முறையைத் தெளிந்து கொள்வதாகும்.

'அரசனாயினும் அளவறிந்து அழித்து உண்ண வேண்டும்' என்பது பெரியோர் வாக்கு. 'எவ்வ

ளவு குறைந்தவரும்படி உள்ளவனாயினும் செலவு களை விரியவிடாது ஆராய்ந்து செய்து வருவனாயின், அவனிடம் பொருட் செல்வம் குறைவின்றி நிலைபெற்றிருக்கும்' என்ற, கருத்துப்பட உரைத்தருளினார் பொய்யாமொழிப் பெரியார்.

மேலும், உலகிலே மக்களுக்குப் பெரிதும் துன்பந்தருவது பிறருக்கு ஆட்பட்டிருத்தலே. ஒருவன் முன்பின் ஆராயாது, சிக்கனமின்றி, வரையறையின்றிச் செலவு செய்து வருவனாயின், அவன் தனது செலவிற்குத், தன்னிடம் பொருளில்லாமையால் பிறரிடம் கடன்படவே நேரிடும். கடன் காலனுக்குச் சமமானது. 'கடன் கொண்டவன் கால்மனிதன்' என்பது பழமொழி. ஸ்ரீ இராமபிரானது பாணம்பட்டு உயிர் துறக்குந்தறுவாயில் நின்ற இராவணனை வருணித்த ஒரு பெரியார் "கடன் கொண்டான் நெஞ்சம் போலும் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்றனர். அன்றியும், கடன் கொடுத்தவர் அறிவு முதலிய வற்றால் மிகத் தாழ்ந்தவராயிருப்பினும், தம்மிலும் பலவகையில் உயர்ந்தவரெனத் தாமே ஒத்துக் கொள்ளும், தம்மிடம் கடன் பட்ட ஒருபெரியவரை மிக இலேசாக நடத்தக் கூடிய நிலைமை உண்டாவதும் இங்குக் கவனிக்கத்தக்கது.

அற்ப இன்பத்திற்கு ஆசைப்பட்டுக் கடன் பெற்றுத் தமது உயிரினுஞ் சிறந்த சுயேச்சையையும், மானத்தையும் போக்கிக் கொள்ளலாமா?

இங்கே, சிலர், "கடன் கொண்டும் செய்வன செய், என்று வருவது பெரியோர் வாக்கல்லவா?" எனக் கூற முன்வரலாம். ஆனல், அடியேன் அவர்க்கு "அஃது உபசார வழக்காகக் கூறப்பட்டதாதலின் விதிவாக்கிய மாகாது; பிறருக்கு ஆட்படும்படி எந்த நீதிநூலும் கூறுதாதலின்" எனவிடை பகருவேன். அன்றியும், அன்னார்க்கு 'உடலின் வன்மைக்குத்தக்க தவமும், பொருளின் நிலைமைக்குத்தக்க அறமும் செய்தலே ஒருவனை உயர்த்துவதற்குப் போதியவாம்' என்ற கருத்துள்ள செந்நாப் போதார் செம்மொழியையும் எடுத்துக் காட்டுவேன். ஊன்றி நோக்குவார்க்குக் கடன் தொல்லை 'சிக்கனம் இல்லாக் குறையாலே தான் உண்டாகிறது' என்பது இனிது புலனாகும் என்பது ஒருதலை. மேலும், சிக்கனத்தைக் கொள்ளாத அன்னார் பொருளிலார் அனுபவிக்கவேண்டிய அனைத்து இன்னல்களையும் அனுபவித்துத் தொலைக்க வேண்டியவ ராவார் என்பது அறியத் தக்கதாம்.

இவ்வளவு கூறியதனால், ஒருவன் பொருள் வரும்படி குறைந்தவனாயிருப்பினும், தனது வரவுக்கு மேற் செலவு செய்யாத வனாகவும், சிக்கனத்தின் பெருமையை உணர்ந்து கைக்கொண்டொழுகுபவனாகவும் இருப்பனாயின், அவன் எந்நாளும் கடன் வாய்ப்பட்டுப் பிறர்க்காளாகாமல் சுயேச்சையுடன் இன்புற்று மானமாக வாழ்ந்து வரத் தக்கவன் என்பது ஒருவகையிற் புலனாம். இதுவரையிற் 'சிக்கனத்தின் பெருமை' என்ற பகுதிக்குரித்தாம். ஆதலின், நேயர்களே, பொருட்செல்வத்தின் அருமையை ஊன்றி யறியுங்கள்; போற்றுங்கள்; அதனை உணர்ந்து கைக்கொண்டு இன்புற்று உயர் நிலையைப் பெற்றிருக்கின்ற பிற நாடுகளைப் பாருங்கள்; அவர்கள் கண்ட முறையையும் பின் பற்றுங்கள்; பொருள் சேருங்கள்; சிக்கனத்தின் பெருமையைத் தெளிந்தறியுங்கள்; கைக்கொள்ளுங்கள். வீடுதலை பெறலாம். இன்பமுறலாம். முயற்சி திருவினையாக்கும்.

அரபிகளின் அழகிய பயிற்சி.

[தத்துவ இஸ்லாம்]

ஐரோப்பாவானது சுகானந்த மற்ற கரடுமுரடான கற்பாறைகளால் அமைக்கப்பட்டிருந்த மாளிகைகளை உண்டு பண்ணிக் கொண்டிருந்த அக்காலத்தில் ஸ்பெயின் தேசத்திலிருந்த முஸ்லிம்கள் (Moors) மட்டும் மகா நேர்த்தியான மாட மாளிகைகளையும் கூட கோபுரங்களையும் காண்போர் கண்ணைப் பறிக்கும்படியாக நிர்மாணித்து வந்தார்கள். ஐரோப்பாவின் மற்றத் தேசங்களின் மாளிகைகளிலெல்லாம் கல்லுங் காடும் நிறைந்து புல்லும் பூண்டும் முளைத்திருக்கும்போது, ஸ்பெயின்தேசத்து முஸ்லிம் மன்னர்களின் மாளிகைகள் மட்டும் காற்றோட்டத்துக்கு அதிக வசதியாகவும் காண்பதற்கு மிக ரம்மியமாகவும் இருக்கும்படி மகா நாகரிகமாக அமைக்கப்பட்டிருந்தன. அவை மிக நேர்த்தியான செங்கல்லாலும் சலவைக்கற்களாலும் கட்டப்பட்டுக் கீழ்த்தேசத்திலிருந்து கொண்டு வரப்பட்டிருந்த மகா நேர்த்தியான இரத்தினக் கம்பளங்களாலும், அழகிய பாய்களாலும், பலவகையான துணிமணிகளாலும், இன்னும் விதம் விதமான மாஸோல் நகரத்து மஸ்லின்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. இன்னும் பல தேசங்களிலுமுள்ள பல வர்ணமான பட்டுத்திரைகளும், மற்றுமுள்ள பலவகைப்பட்ட தின்பண்டங்களும், வாசனைத் திரவியங்களும் அத்தேசத்து மூர் என்னும் முஸ்லிம்களின் மாளிகைகளில் மிக மும்முரமாக விளங்கிவந்தன. அக்காலத்திலிருந்த கிரிஸ்தவ நூல்களையெல்லாம் ஏட்டில் எழுதிப் பார்த்தால் அவை சில நூற்றுக்கணக்கான ஏடுகளிலேயே முடிவடைந்திருக்கும். ஆனல் அந்த அரபிகளோ அனேக நூற்றுக்கணக்கான ஒட்டகங்களின்மீது யூனான் (கிரீக்), இப்ரானி (ஹீப்ரு), பார்ஸி முதலிய பாஷைகளிலுள்ள கையெழுத்துப் புத்தகங்களையெல்லாம் தங்களுடைய தலை நகரான பகுதாதென்னும் பட்டணத்துக்கு எடுத்துச் சென்று அரபு பாஷையில் மொழி பெயர்த்துப் பலருக்கும் படிப்பிக்கும் பொருட்டு வரிசை வரிசையாகக் கொண்டுபோனார்கள். ஸ்பெயின் தேசத்திலிருக்கும் முஸ்லிம் ராஜதானி நகரமாகிய கார்டோவா என்னும் பட்டணமானது தன்னுடைய பெருமையிலும் அழகிலும் நாகரிகத்திலும், கலீபாவின் தலை நகராகிய பகுதாத் பட்டணத்துக்கு மட்டுமே இரண்டாவதென்று கூறலாம். அந்தக் கார்டோவாவில் அக்காலத்தில் பகிரங்க வீதிகளின் வழியே சுமார் 10 மைல் தூரம் வரையில் அரசாங்க தீப வெளிச்சத்தின் கீழேயே திரிந்து செல்லலாம். அங்கிருந்த அவர்களுடைய 911 ஸ்னான கட்டடங்களும் அம்மூர் ஜாதியார்களுடைய 3,877 மஸ்ஜிதுகளைப்போலவே அவ்வளவு அழகாகவும் நேர்த்தியான பரிசுத்தமாகவும் அமைக்கப்பட்டிருந்தன.

ஐரோப்பா கண்ட முழுதும் மௌட்டீகமான அந்தகாரத்தில் மூழ்கிக்கிடந்த காலத்தில், இன்னும் இங்கிலாந்து தேசமானது ஒரு தனி ராஜ்யமாக ஒன்று சேராமல் எழுவகைப்பட்ட சில்லரை அரசு முறைகளாகப்பிரிந்து கிடந்து, தன்னுடைய சரித்திரத்தையே ஆரம்பம் செய்யாமலிருந்த அந்தக் காலத்தில் இந்த முஸல்மான்கள் தங்களுடைய தேர்ச்சியடைந்த தத்துவ ஆராய்ச்சியுடனும், சகல விதமான சாஸ்திர ஞான (ஸயன்ஸ்) முதிர்ச்சியுடனும், அழகிய சிற்ப சாஸ்திரப் பழக்கத்துடனும், ஆழமான கணித சாஸ்திரத் தேர்ச்சியுட

னும் அந்த ஸ்பெயின் தேசத்தில் வந்து ராஜ்யபாரம் செலுத்தத் தொடங்கினார்கள். லௌகிக வைதிக சம்பந்தமான எல்லாக் காரியங்களிலும் அந்த அரபு முஸல்மான்கள் முன்னேற்ற மடைந்து வந்தார்கள்.

மார்க்க ஞானத்திலும் சட்ட நிபுணத்துவத்திலும் அவர்கள் மகா நாகரிகமுள்ளவர்களாயிருந்தார்கள். அவர்களுடைய இல்மேகலாம் என்னும் கல்வி ஞானமானது ஐரோப்பா முழுதும் கரை கடந்து விளங்கிற்று. கணித சாஸ்திரத்தில் எவ்வளவு தூரம் அந்த அரபிகள் தேர்ச்சி யடைந்திருந்தார்களென்பதை அவர்களால் கண்டு பிடிக்கப்பட்ட algebra என்னும் அக்ஷர கணிதத்தினின்றும் நாம் நன்கு தெரிந்துகொள்ளலாம். "அல்ஜபர்" என்பதே அரபு வார்த்தையாகும். அல்கலி (alkali), அல்அன்பீக் (alembic) முதலிய பதங்களிலிருந்தே அவர்களுக்கு ரஸாயன சாஸ்திரத்தில் (Chemistry) எவ்வளவு பயிற்சி புண்டென்பதைக் கண்டுகொள்ளலாம். Chemistry என்னும் பதமும் "கீமியா" என்னும் அரபு வார்த்தையினின்றுமே தோன்றி யிருக்கிறது. இப்பொழுது கணித சாஸ்திரத்தில் வழங்கிவரும் எண்களும், இலக்கங்களும், ஒன்று, பத்து, நூறு என்னும் ஸ்தான முறைகளும் இந்த அரபிகளாலேயே கொண்டுவரப்பட்டன. இன்னும் மாளிகைகளையும் மற்றப் பொருள்களையும் அலங்காரம் செய்வதில் அவர்கள் மிகக் கைதேர்ந்திருந்தார்கள். "அரபோ" (arabesque) என்னும் வின்னியாசமான விசித்திரவேலையும் அந்த அரபிகளாலேயே உற்பத்தி செய்யபட்டது.

தன்மதிப்பையும் பெண்மதிப்பையும் காப்பாற்றக்கூடிய வீரப்பிரதாபத்தை (Chivalry) அந்த அரபிகளே இவ்வுலகில் முதன் முதல் உண்டுபண்ணினார்கள். அரபிகளுக்குக் கவிபாடுவ தென்பது சர்வசாமான்யமான ஒரு சந்தோஷப் பழக்கமாயிருந்தது. அவர்களுடைய பாஷா தத்துவ மேதாவித்தன மெல்லாம் அவரது கவித்திறத்தாலே வெளியாகும். புராதன கிரேக்கர்களால் கொண்டாடப்பட்டு வந்த வான சாஸ்திரத்தை மௌட்டீகத்தில் மூழ்கிக்கிடந்த ஐரோப்பாவானது கைவிட்டிருக்க, அந்த அரபிகளோ அந்த வானசாஸ்திரத்தின் பிறப்பிடமாகிய பாபிலோனியாவுக்குச் சென்று அதை முன்னுக்குக் கொண்டு வந்தார்கள். அவர்கள் பூகோள சாஸ்திரத்தில் மகா நிபுணர்களா யிருந்தார்கள். அல்பாராபி என்னும் அறிஞர் தாம் எழுதிய மண்டல மகா கிரந்தத்தால் உலக ஞானத்தையெல்லாம் ஒருவழிப்படுத்த முன் வந்தார். தத்துவ சாஸ்திரத்திலும் வைத்திய சாஸ்திரத்திலும் இப்னுஸீனா, இப்னுருஷ்த் முதலிய ஹக்கீம்களின் நாமதேயங்கள் இன்றும் மகா சிலாக்கியத்துடன் கொண்டாடப்பட்டு வருகின்றன.

புயற் காற்று

[V. நாராயணையர் M. A., M. L.]

(பிரஹ்ம ஸமாஜத்தைச் சேர்ந்த அந்நத பாபுவின் குமாரியும், நண்பன் யோகேந்திரனின் சகோதரியுமான ஹேமநளினியை இராமேசன் காதலித்ததும், அவனுடைய தகப்பனார் அவனை ஊருக்குக் கூட்டிச்சென்று அங்கே அவனுக்கு மணம் செய்வித்ததும், மணம் கழிந்து ஊருக்கு மணப்பெண்ணுடன் திரும்பிவரும் போது புயற்காற்றால் ஆற்றில் ஓடங்கள் கவிழ்ந்ததும், அப்போது வேறு ஓடத்தினின்றும் தப்பிப்பிழைத்த கமலா என்ற சிறு பெண்ணை தன் மனைவி யெனவும் அவளும் கல்லியாணகாலத்தில் தன்புருஷன் முகத்தை நன்றாய் பார்த்திராததால் இராமேசனை தன் கணவன் என்வும் கொண்டதும்; பிறகு இராமேசன் கமலாவை டோபாபுகூர் தாணீ சரணரின் தமையன் மகள் என்றும், வேறுஒருவர் மனைவி என்றும் அறிய, அவளைப்பெண் பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பியதும், வக்கீல் வேலையில் அமர்ந்து ஹேமநளினியை மறுபடி நாடி கல்லியாணத்திற்கு உடன்பட்டதும்; கல்யாண தினமும் குறிப்பிடப்பட்டு, உறவினர்களுக்கு அழைப்புக் கடிதங்கள் அனுப்பிய பின்னர், கமலாவை பள்ளிக்கூட விடுமுறை நாளானதால் வீட்டிற்கு அழைத்துப்போக வேண்டுமென்று உபாத்தியாயினியிடமிருந்து கடிதம் அடைய, கமலாவின் கதையை இதுவரை வெளியிடாத இராமேசன் ஒன்றும் தோன்றாது கலங்கி, பிறகு கல்யாணதினத்தை ஒதுக்கிவைக்க அந்நதபாபுவை வேண்டியதும், அவர் அதற்கு கடைசியாக உடன்பட்டுவிட்டதும்; பிறகு வெளியூருக்குச் சென்றிருந்த யோகேந்திரன் வந்து கல்லியாண காரியங்கள் நடைபெறாததைக் கேட்டு, கவலையுற்று, அக்ஷயனுடன் இராமேசன் வீடு சென்று, அங்கு பள்ளிக்கூடமிருந்து வந்த கமலாவுடன் இராமேசன் பேசிக்கொண்டிருந்ததை நேரில் பார்த்து, இராமேசனோடு ஆத்திரத்துடன் வாதாடியதும், சென்ற சஞ்சிகைகளிலுள்ள கதை)

யோகேந்திரன் நல்ல செய்தி கொண்டுவர வேண்டும், இந்த மனஸ்தாபங்கள் எல்லாம் ஒழிய வேண்டும் என்று அந்நதபாபு விரும்பி இருந்ததால் யோகேந்திரனும் அக்ஷயனும் திரும்பவந்ததும் அவர்கள் பேச்சை எதிர்பார்த்திருக்கவே, யோகன் 'நன்றாயிருக்கிறது, காரியம்; அப்பா, இவ்வளவு தூரம் இராமேசனுக்கு இடம் கொடுப்பீர்கள் என்று நான் நினைக்கவே இல்லை. இவ்விதம் ஆகப்போகிறது என்று எனக்கு முன்பே தோன்றியிருந்தால் அவனைத் தங்களிடம் கூட்டிவந்திருக்க மாட்டேன்.'

அந்நதபாபு: 'நீயே என்னிடம் எத்தனை தடவைகள் சொல்லியிருக்கிறாய், இராமேசன் ஹேமநளினியை மணப்பது வெகு நலம் என்று. அதைத் தடுக்கவேண்டு மென்றிருந்தால், ஏன் —?'

யோகேந்திரன்: 'ஆமாம், எனக்கும் அதைத் தடுக்கவேண்டும் என்று தோன்றவில்லை, இருந்தாலும்,—'

அந்நதபாபு; இருந்தாலும் என்று ஒரு அக்ஷணையா? ஒன்று நடத்தவேண்டும்; இல்லாவிடில், தடைசெய்யவேண்டும்; இடையே இருந்தாலும் என்று என்ன மழமழப்பு.'

யோகேந்திரன்: 'இருந்தாலும், இவ்வளவு தூரம் போக விடுவது—' எனவே, அக்ஷயன் இடையிற் புகுந்து: 'சில காரியங்கள் தாமாகவே நடக்கின்றன, அவைகளை நடத்துவது என்று ஒருவர் முன் வரவேண்டியதில்லை. அவைகள் தாமே முற்றி முதிர்ந்து வெடித்து விடுகின்றன. சரி, காரியத்தைக் கைவிட்டபின் நொந்து என்ன பயன். மேல் நடத்த வேண்டியதைப் பற்றி யோசனை செய்வோம்.'

'இராமேசனைப் பார்த்தீர்களோ?' என்றார் அந்நதபாபு விசாரத்துடன். யோகேந்திரன்: 'பார்க்காமலா? பார்த்தோம், அவன் குடித்தனத்தை, அவன் மனைவியைக்கூட கண்டோம்?' அந்நதபாபு திடுக்கிட்டு: 'அவன் மனைவியையா?' என்றார் பேச வாய் வந்ததும். யோகேந்திரன்: 'ஆம், இராமேசன் மனைவி.'

அந்நதபாபு: 'அதெப்படி? எனக்கு விளங்கவில்லையே. எந்த இராமேசன் மனைவி.'

யோகேந்திரன்: 'நம்முடைய இராமேசன் மனைவிதான். அப்போது அவன் ஊருக்குப்போனது கல்லியாணம் செய்து கொள்வதற்காகவாம்.'

அந்நதபாபு: 'அவன் தகப்பனாரின் மரணத்தால் அதெல்லாம் நின்றுவிட வில்லையா?'

யோகேந்திரன்: 'இல்லை; இல்லை. அதற்குமுன்பே கல்லியாணம் ஆய்விட்டது.'

அந்நதபாபு திகைத்தவராய் தலையைச்சொரிந்துகொண்டே சற்று யோசித்து, பிறகு 'அப்படியானால் நம்முடைய ஹேமாவை கல்லியாணம் செய்து கொள்ளமுடியாது' என்றார்.

யோகேந்திரன்: 'அதனால்தான், நான் சொல்லுகிறேன்—'

அந்நதபாபு: 'நீ என்னவேண்டுமானாலும் சொல்லிக்கொள். கல்லியாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் அநேகமாய் ஆயின. எல்லாருக்கும் இந்த ஞாயிற்றுக்கிழமை அல்ல, அடுத்த ஞாயிற்றுக்கிழமை என்றும் எழுதியாய் விட்டது, இப்போது மறுபடியும் கல்லியாணம் நின்றுவிட்டது என்று எழுதவேண்டும்போல் இருக்கிறதே.'

'அதுவேண்டாம், சற்று மாற்றினால் எல்லாம் சரியாய்விடுமே' என்றான் யோகேந்திரன்; 'என்ன மாற்றுவது' என்று அந்நதபாபு ஆச்சரியப்படவே, 'இது தெரியவில்லையா? இராமேசனுக்குப் பதிலாக வேறு மாப்பிள்ளையை வைத்து நிச்சயப்படி அடுத்த ஞாயிற்றுக் கிழமை யன்றே கல்லியாணத்தை நடத்திவிடுவோம். இல்லாவிட்டால் ஊரார் முகத்தில் எப்படி விழிப்பது?' என்று அக்ஷயனைப்பார்த்தான் யோகேந்திரன்.

அக்ஷயன் வெட்கித் தலைகுனிய, அவன் கண்கள் பூமியை நாடின.

அந்நதபாபு: 'அதற்குள் எங்கே கிடைப்பான் மாப்பிள்ளை?'

யோகேந்திரன்: 'அந்த விசாரம் உமக்கு என்னத்திற்கு?'

அந்நதபாபு: 'ஆனால் ஹேமா சம்மதிக்கவேண்டாமா?'

யோகேந்திரன்: 'இராமேசன் நடத்தையைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லிவிட்டால், அவள் சம்மதியாதிருப்பாளா, என்ன?'

அந்நதபாபு: 'சரி, எப்படி யுக்தமோ அப்படிச் செய், என்ன ஆனால் என்ன, இராமேசன் நல்லவரன், கெட்டிக்காரன், புத்திசாலி, படித்தவன் சொத்தும் இருந்தது, நேற்றுத்தான் கல்லியாணத்திற்கப்புறம் எடாவாவிற்குப்போய் அங்கே வக்கீல் வேலை பார்ப்பது என்று என்னுடன் ஒப்புக்கொண்டான்; அதற்குள்ளே என்னவெல்லாம் ஆய்விட்டது, பார்!'

யோகேந்திரன்: 'இனிமேல் அதைப்பற்றி விசாரப்படாமேயும், அப்பா; வேண்டுமென்றால், இராமேசன் எடாவா விற்குப் போகட்டும் அல்லது வேறு எங்கே வேண்டுமானாலும் போகட்டும்; ஹேமாவைக் கூப்பிடட்டுமா, நாழிகையாகிறது' என்று வெளிச்சென்று இரண்டொரு நிமிஷத்தில் ஹேமநளினியுடன் திரும்ப வரவே, அக்ஷயன் வெட்கி புஸ்தக மறைப்பில் மறைந்துகொண்டான்.

'ஹேமா, உட்கார், உன்னிடம் ஒரு சமாசாரம் சொல்லவேண்டும்' என்றான் யோகேந்திரன். ஒரு வார்த்தையும் பேசாமல் நாற்காலியில் விதியே என்று அமர்ந்தாள் ஹேமநளினி.

'இராமேசனிடம் சந்தேகம் உண்டாகும்படி ஏதாவது நடந்ததோ?' என்று மெதுவாய் செய்தியை வெளியிடுபவனாய் பேச்சைத் தொடங்கினான் யோகேந்திரன். ஹேமா, இல்லை என்று தலையை அசைத்தாள்.

'கல்லியாணத்தை ஒருவாரம் ஒதுக்கிவைத்தானே? நமக்கு வெளியிடக்கூடாதபடி காரணம் என்ன இருக்கலாம் அதற்கு?'

'காரணமில்லாமலா? ஏதாவது இருக்கும்' என்று தலை குனிந்தவண்ணமே ஹேமநளினி பதில் சொல்லவே,

'ஆமாம், அது என்ன காரணம் என்று சந்தேகப்படவேண்டாமா?' வேண்டாம் என்று அறிவிப்பவளாய் தலையை அசைத்தாள் ஹேமநளினி.

இவ்விதம் இராமேசனிடம் முழு நம்பிக்கை காட்டியது யோகேந்திரன் கோபத்தை மூட்டிடவே, மழமழப்பாய் பேசுவதை விட்டு, கடினமாய் 'இராமேசன் தன் தகப்பனாரோடு புறப்பட்டுப் போனது ஞாபகமிருக்கிறதா? அப்போது அவன் வெகுநாள் காகிதம் எழுதவில்லை, ஏன் எழுதவில்லை என்று இருந்தோமே, அதற்குமுன் அடுத்த வீட்டில் இருந்தவன் தினம் இருமுறை நம் வீட்டிற்கு வருபவன், கல்கத்தாவிற்குத் திரும்ப வந்தபோது எங்கேயோ மைல்களுக்கு அப்பால் குடித்தனமாய் இங்கே வராமலே இருநதான் அல்லவா? அப்போதுகூட உங்கள் இருவருக்கும் அவன்மீதுள்ள நம்பிக்கை குறையவில்லை; மறுபடியும் முன்போல வரச்சொன்னீர்கள், நான் இருந்தால் அழைத்திருக்கமாட்டேன்.'

இதற்கும் ஹேமநளினி வாய்திறக்கவில்லை.

யோகேந்திரன்: 'இதென்ன இப்படி ஒருமாதிரியாய் இருக்கிறான் இவன் என்று யாராவது சற்று விசாரித்தீர்களா? கொஞ்சமேனும் சந்தேகம் கொண்டீர்களா! என்ன நம்பிக்கை இது.'

அப்போதும் ஹேமநளினி பேசவில்லை.

யோகேந்திரன்: 'சரி; நீங்கள் யாரையும் கொஞ்சமேனும் சந்தேகிக்க மாட்டீர்கள் அல்லவா? அதுபோல நான் இப்போது சொல்வப்புகுவதையும் நம்புவீர்கள் என்று நினைக்கிறேன். நானே நேராய் பெண் பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்குப் போனேன்; அங்கே இராமேசன் மனைவி படிக்கிறாள் என்று தெரிந்துகொண்டேன்; விடுமுறை நாட்களும் அவள் அங்கேயே இருக்கவேண்டுமென்று அவன் ஏற்பாடு செய்திருந்தானாம்; திடீரென, இரண்டு மூன்று நாட்களுக்கு முன் தலைமை உபாத்தியாயினி கமலாவை அதாவது இராமேசன் மனைவியை அங்கே விடுமுறைக் காலத்தில் வைத்துக்கொள்ள முடியாது என்று எழுதினளாம்—இன்றுதான் பள்ளிக்கூடம் கலைந்தது; கமலாவை பள்ளிக்கூட வண்டியில் ஏற்றி "டார்ஜிபாரா"வில் அவர்கள் பழைய ஜாகையில் கொண்டு வந்துவிட்டார்கள். பிறகு நானும் அங்கேபோனேன்; கமலா "ஆப்பிளை" அறுமாமணையில் நறுக்கி தோல் சீவிக்கொண்டிருந்தாள்; இராமேசன் அவளருகில் உட்கார்ந்துகொண்டு துண்டங்களைத் தட்டிலிருந்து எடுத்துத்தின்று கொண்டிருந்தான். 'இதென்ன இது' என்று இராமேசனைக் கேட்டுப் பார்த்தேன். ஒன்றும் சொல்லவில்லை. கமலா என் மனைவியல்ல என்றாவது மறுதளித்தால் ஒருவேளை அவனை நம்பி சந்தேகங்களை விடுத்திருப்போம்; ஆனால், அவன் ஒன்றும் சொல்லமாட்டேன் என்று சாதித்த பிறகும் அவனை எப்படி நம்புவது?'

பதில் எதிர்பார்த்து தன் சகோதரியின் முகத்தை நோக்கினான் யோகேந்திரன்; அவள் முகம் வெளுத்திருந்தது; நாற்காலியை தன் முழு பலத்தோடும் பிடித்துத் திடப்படுத்திக் கொண்டாள் ஒரு நிமிஷம்; மறு நிமிஷம், அவள் தலைசாய்த்து மூர்ச்சையாய் கீழே விழுந்து விட்டாள்.

அந்நதபாபுவின் துயரத்தைக் காணப் பரிதாபமாயிருந்தது. தன் மகளுடைய தலையை மெதுவாய் பூமியினின்றும் தூக்கி தன் மார்பில் சார்த்தி 'ஒன்றுமில்லை, குழந்தாய், ஒன்றுமில்லை. அவர்கள் சொல்வதை ஒருவார்த்தைகூட நம்பாதே—அதெல்லாம் வெறும்பொய்.' என்று புலம்பினார். யோகேந்திரன் தன் தகப்பனாரைத்தள்ளி ஒதுக்கி ஹேமநளினியைத் தூக்கி 'சோபா'வின் மேல் கிடத்தினான். அருகில் ஒரு பீங்கானில் ஜலமிருந்தது. அதை எடுத்து அவளுடைய முகத்திலே தெளித்தான். அக்ஷயனும் கை விசிறி யொன்றை எடுத்து விசிறினான்.

ஹேமநளினி, சற்றுநேரமானதும் கண்ணைத் திறந்தாள். உடனே திகிலடைந்தவள்போல் தகப்பனாரைப்பார்த்து 'அப்பா, அப்பா, அக்ஷயபாபுவை போகச்சொல்லுமேன்' என்றாள்.

அக்ஷயன் உடனே விசிறியைக் கீழேவைத்துவிட்டு நடைப்புறம் போகவே, அந்நதபாபு ஹேமநளினியின் அருகே 'சோபா'வில் உட்கார்ந்துகொண்டு அவளுடைய கூந்தலையும் கழுத்துப்புறத்தையும் தடவிக்கொடுத்து 'என் அம்மா, என் அம்மா!' என்று பெருமூச்செறிந்துகொண்டு இருந்தார். அவருக்கு ஒன்றும் ஓடவில்லை.

திடீரென அவள் கண்களில் நீர்ததும்பி அவள் மார்பு படபடத்தது. அடக்க முடியாத தன் துயரத்தை எப்படியாவது அடக்கவேண்டுமென்று யத்தனித்து தன் தகப்பனாரின் மடியில் படுக்கவே அவரும் தயங்கிய துவனியில் 'விசாரப்படாதே அம்மா, ஒன்றுமிராது; இராமேசனை எனக்கு நன்றாய் தெரியும்; அவன் நம்மை ஒருக்காலும் ஏமாற்றமாட்டான்; யோகன் ஏதாவது தப்பு அர்த்தம் செய்துகொண்டு இருப்பான். வேறு ஒன்றுமிராது' என்று தேற்றினார்.

யோகேந்திரன் இதைப் பொறுக்க முடியாதவனாய் 'வீண்வார்த்தை சொல்லி பொய் நம்பிக்கை கொடாதேயும், அப்பா, அதென்ன பிரயோசனம்; இப்பொழுது இல்லாவிட்டால் பிறகு தெரியாமற் போகுமா? அதைவிட இப்பொழுதே அவள் இதைப்பற்றி யோசித்து தீர்மானிப்பது நலமன்றோ?'

இதைக்கேட்டதும், ஹேமநளினி தன் தகப்பனாரின் மடியினின்றும் தலையைத்தூக்கி எழுந்து உட்கார்ந்து யோகேந்திரனைப் பார்த்து, 'அவர் வாயினின்றும் இதைக்கேட்டறிந்தாலொழிய நான் ஒன்றையுமே நம்பப்போகிறதில்லை; இது நிச்சயம்' என்று சொல்லிக்கொண்டே எழுந்தாள். ஆனால் நடக்கமுடியாமல் அவளுக்குக் கால்தடுமாற்று. அந்நதபாபு விரைந்தெழுந்து அவளைக் கீழே விழாமல் பிடித்துக்கொண்டு, கையைப்பிடித்து மெதுவாய் அவளை அவளுடைய அறைக்குக் கூட்டிக்கொண்டு போனார்.

அங்கே போய் படுக்கையில் படுத்ததும் 'அப்பா, என்னை சற்று தனியே விட்டுவிடு, தூங்கப்போகிறேன்' எனவே, அவர் 'கிழவியை (ஹேமநளினியை வளர்த்த வேலைக்காரியை) அனுப்பட்டுமா, உனக்கு விசிறுவதற்கு' என்று கேட்க, 'வேண்டாம், அப்பா, நான் கொஞ்சநேரம் தனித்திருக்க விரும்புகிறேன்' என்றாள் ஹேமநளினி.

அந்நதபாபு பக்கத்தறையில் போனார். அவருடைய மனதும் எண்ணங்களும் ஹேமாவுக்கு மூன்றாம் வயதிலே காலஞ்சென்ற அவளுடைய தாயாரைக்குறித்துச் சென்றன. அவளது அன்பும் காதலும் பொறுமையும் என்றும் மாறாத அவளுடைய சந்தோஷ முகமும் உத்சாகமும் எல்லாம் இப்போது அவர் நினைவிற்கு வந்தன. அவளுடைய பிம்பம்போல் வளர்ந்துவந்த பெண், தான் இவ்வளவு ஆண்டுகளாய் தாய் ஸ்தானத்தை வகித்து வளர்த்த பெண் இக்கதி யாயினளே என்று அவர் மனம் சால வருந்தியது. அவளுடைய அறைக்கும் தான் இருந்த அறைக்கும் இடையேயுள்ள சுவரைக்கடந்து அவருடைய மனது, அங்கே படுத்துக்கிடந்த பெண்ணைப்பார்த்து 'அம்மா, உன்வழியுற்ற சகல சங்கடங்களையும் கடவுள் விலக்குவாராக! உன் வாழ்நாள் சுகமேயாகுக, நான் உன் தாயாரைக் காணச்செல்லுமுன் நீ உன் காதலன் மனையில் மனைவியாய் அமர்ந்து சுகித்திருப்பதை காண்பேனாகுக' என்று பிரார்த்தித்தது. கண்ணீரால் நனைந்த அவரது கண்களை சட்டைதுனியால் துடைத்துக்கொண்டு படுக்கையில் சாய்ந்தார் அந்நதபாபு.

யோகேந்திரன் எப்போதுமே பெண்மதியை மதிப்பவனல்ல. இன்று நடந்த செய்திகளும் அவன் அபிப்பிராயத்தைத் திடப்படுத்தின; நேரான ருசுவைக்கூடக் கவனியாத பெண்பாலரைக் கொண்டு என்ன காரியம் நடக்கும்? தங்களுடைய சொந்த சுகத்தை யொட்டிய காரியமானால் இரண்டும் இரண்டும் நான்கல்ல என்று மறுக்கிறார்களே ஸ்திரீ ஜனங்கள்! புத்தியுக்தமாய் கருப்பு கருப்பு என்றாலும் காதல் கருப்பை வெள்ளை என்று கூறின் புத்தியைக்கடிந்து பொய்யை மெய்யெனக் கொள்கிறார்களே! ஸ்திரீகள் இப்படி இருந்தும் எப்படி உலகில் காரியங்கள் நடைபெறுகின்றன என்பதே யோகேந்திரனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

'அக்ஷயா' என்று கூப்பிட்டான்.

அக்ஷயன் வந்ததும் 'கேட்டாயா எல்லாவற்றையும், இனி என்ன செய்வது?' என்றான்.

'என்னை என்னத்திற்கு இழுக்கிறாய், அப்பா, இந்த சங்கடத்திற்கு. என் காரியமல்லவே இது; இதுவரை சும்மா இருந்தவனை வலுவில் இழுத்துப் போடாதே' என்றான் அக்ஷயன் சலிப்புடன்.

யோகேந்திரன்: 'சரி, சரி; எனக்குத்தெரியும் உன் வருத்தத்திற்குக் காரணம்; அதைப் பற்றி பின்னால் பேசிக்கொள்வோம்; இப்போது என்ன செய்வது; ஒருவேளை இராமேசனைக் கொண்டு ஹேமநளினியிடம் உள்ளதையெல்லாம் சொல்லச்செய்யலாமா?'

அக்ஷயன் 'பைத்தியமா உனக்கு? அவன் எப்படி—'

யோகேந்திரன்: 'அதைவிட அவனைக்கொண்டு ஸவிஸ்தாரமாய் ஒரு காகிதம் எழுதச்சொன்னால் நல்லது அல்லவா? அதை நீதான் முடிக்கவேண்டும். ஆகையால் உடனே புறப்படு; காரியத்தைப் பார்' என்று சொல்லவே,

அக்ஷயன்: 'என்னாலானதைப் பார்க்கிறேன்' என்று சொல்லிக்கொண்டு புறப்பட்டான்.

கதர்ப் பாட்டு

[பரலி. சு. நெல்லையப்ப பிள்ளை அவர்கள்.]

சுத்த சுதேசியக் கத்தர்த் துணியினைச்
  சோதரரே நீர் கொள்வீர்—இனி
மற்றதெல்லாந் தள்ளி நாட்டுத் துணியினை
  மாண்புடனே நீர் கொள்வீர். (சுத்த)

நாட்டில் விளைந்த நம் பஞ்சினைக்கொண்டு நம்
  நாட்டினில் செய்த துணி!
வீட்டினில் மாதர்கள் ராட்டினில் நூற்ற
  மேன்மை சேர் நூலைக்கொண்டு
நாட்டுத் தறியில் நம் நாட்டவர் நெய்த
  நயமான கத்தர்த் துணி!
பாட்டினிற் பாடியே வேண்டுகின்றோம் நீர்
  பண்புடன் வாங்குவீரே! 1

நன்மை தருந்துணி! தின்மை யறுந்துணி!
  நாட்டினில் செய்த துணி!
வன்மை தருந்துணி! வாழ்வு தருந்துணி!
  மாண்புடைக் கத்தர்த் துணி!
கன்ம மறுந்துணி! தன்மம் வளர்துணி!
  காந்திசொல் மேன்மைத் துணி!
இன்ன லறுந்துணி! இன்பந் தருந்துணி!
  இந்திய நாட்டுத் துணி! 2

பஞ்சம் அழிந்திடும் நோய்கள் ஒழிந்திடும்
  பாவம் அழிந்திடுமே
சஞ்சலம் நீங்கிடும் தாழ்வுகள் நீங்கிடும்
  தாசத் தனம் நீங்கும்
கஞ்சியில் லாமல் வருந்திடும் ஏழைகள்
  கஷ்டங்கள் நீங்கி விடும்
மிஞ்சிய சுத்தத் துணியிதை என்றும்
  விருப்புடன் கொள்வீரே. 3

குடியும் அபினும்

லாகிரி வஸ்துக்களால் உண்டாகும் கேட்டை ஆண்டுரூஸ் துரை விளக்கி எழுதி யிருப்பதின் மொழி பெயர்ப்பு.

விலை ரூ. 0 2 0

ஒத்துழையாமை ஏன்?

இப்பொழுது தேசமெங்கும் தெய்வீக ஆவேசத்துடன் வேரூன்றிவரும் ஒத்துழையாமை இயக்கத்தின் விருத்தாந்தத்தை ஆதியோடந்தமாய் ஒரு கோர்வையாக அறிய விரும்புவோருக்கு உற்ற நூல். ஒத்துழையாமையே சுயராஜ்ய வாழ்வுக்கும் சுய மதிப்புக்கும் ஒப்பற்ற சாதனம் என்பதும், அதன் உள்ளுறை தத்துவங்கள் இன்னவென்பதும், செம்பாகமான தமிழ் நடையில் நன்கு விளக்கிக் காட்டப்பட்டுள்ளன. ஒத்துழையாமை விஷயமாக மகாத்மா காந்தி செய்துள்ள அரியபிரசங்கங்கள் சிலவும் சேர்க்கப்பட்டுள்ளன. விலை ரூ. 0—8—0

கணேஷ் கம்பெனி,
39, தம்பு செட்டி தெரு, சென்னை.

புத்தக விளம்பரங்கள்.

சுதேசமித்திரன் புத்தகசாலை.

உதயலன்.

என்கிற கொற்கைச் சிங்களவன்.

ஷேக்ஸ்பியர் மகாகவி ஆங்கிலபாஷையில் எழுதியுள்ள "ஒதெல்லோ என்கிற வெனிஸ் மோரியன்" என்னும் ஓர் அருமையானநாடகம். அ. மாதவையா அவர்கள் மொழிபெயர்த்தமைத்தது. ——— விலை அணா 12.

பத்மாவதி சரித்திரம்.

ஸ்ரீமான் அ. மாதவய்யா, பி.ஏ., எழுதிய அருமையான நாவல். புதிய பதிப்பு 10 படங்களுடன் கூடியது. இந்நூல் அலங்காரமாய் அநேக பழமொழிகளை அணிந்து சில மதுரமான கவிகளை உள்ளடக்கி, சிறுவர் சிறுமிகளும் எளிதிற் படித்தறியும்படியான தமிழ் நடையில் உள்ளது. ——— விலை ரூ. 2.

வர்த்தகயுக்தி.

வியாபார சம்பந்தமான விஷயங்கள் கொண்டது. ஒவ்வொரு தொழிலாளியும் அவசியம் படிக்க வேண்டிய நூல். இதனை மெச்சிப் புகழாத பத்திரிகைகள் கிடையா. முதற் பதிப்பு விளம்பரமின்றி விற்பனை. இரண்டாம் பதிப்பு பத்திரிகையில் விளம்பரம் செய்த ஒரு வாரத்துக்குள் விற்பனை. இது நான்காம் பதிப்பு. விலை அணா 6.

கதாமாலிகா.

இது ஒரு கதைக் களஞ்சியம்.

ஸி. சுப்பிரமணிய பாரதியார் எழுதிய விநோதக் கதைகளும், விசித்திரங்களும், பொதிந்து கிடக்கின்றன. கதா விநோதம், 33-விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. ——— விலை ரூபா 1.

பாமாலை.

இராமலிங்க ஸ்வாமிகள், மாணிக்க வாசகர் முதலியோர் திருவாய்மலர்ந்த சில அற்புத பாடல்களை, ஒரு பெரியார் தொகுத்தபடி அச்சிடப்பட்டிருக்கிறது. கோயம்பத்தூர், திருநெல்வேலி ஜில்லாக்களில் பிரதிவாரந்தோறும் படிக்கும் பக்த சிரோமணிகளுக்கு இந்நூல் மிகவும் உபயோகமானது. ——— விலை அணா 4.

சிறைவாசஞ் செய்யும்
கிருஷ்ணஸ்வாமி சர்மா
அவர்களால் எழுதப்பட்டது.

	ரூ.	அ.
மகாத்மாகாந்தியின் குரு, டால்ஸ்டாய்	0	4
பண்டித மோதிலால் நேரு	0	2
மகாத்மா காந்தி	1	8
சித்தரஞ்சன தாஸ்	0	12
முஹம்மத் அலி, ஷவுகத் அலி	1	0
ஸ்வராஜ்யம்	0	8
லாலாலஜபதிராய்	0	8
சிவாஜி	1	0

திக்கற்ற இருகுழந்தைகள்.

இந்த நாவல் பெரியதாயும் வாசிக்கும் போது மனக்கிளர்ச்சி யுண்டாக்ககூடியதாயுமுள்ளது. இன்பச்சுவை மிகுந்து மகளிர் வாழ்க்கையிற் படிப்போர் யாவருக்கும் அனுதாபமும் ஒற்றுமையுணர்ச்சியும் விளையும்படி செய்கின்றது. இது யாவருக்கும் விளங்கும் எளிய நடையில் எழுதியது. படிக்கப் படிக்க மேன்மேல் மனதைக் கவரும் இனிய கதைப்போக்கையும் நன்கறிந்து கொள்ளலாம். விலை ரூ. 1-8.

மானேஜர், சுதேசமித்திரன்,
சென்னை.

சென்னை ஜார்ஜ் டவுன் நெ. 1, மக்லீன் தெருவு, எவ்வரிமான்ஸ் அச்சுக்கூடத்தில்
டி. சுந்தர வாதனால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16.
'தமிழ் உலகு' காரியாலயத்தில் பத்திராதிபரால் பிரசுரிக்கப்பட்டது.